ஐ.எ. நெ.221/2017 - அசல் வழக்கு எண். 30/2017 ம.சா1. துரைராஜா த/பெ துரைசாமி
12.01.2023 குறுக்கு விசாரணை தொடர்ச்சி.....

ஐ.எ. நெ.221/2017 மனுவானது தவறான தகவல்கள் கொடுக்கப்பட்டது என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டது. வேறு எந்த காரணங்களுக்காகவும் அல்ல. நான் இந்த மனுவை எனக்காகவும் அசல் வழக்கின் 2ம் பிரதிவாதி மணி என்கிற பாலசுப்பிரமணியம் என்பவருக்காகவும் சேர்த்து தாக்கல் செய்திருப்பதாக மனுவில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு மணி என்கிற பாலசுப்பிரமணியம் அவரது சார்பில் அசல் வழக்கில் பதிலுரை தாக்கல் செய்வதற்கோ அல்லது வேறு ஏதேனும் இடைக்கால மனுக்கள் தாக்கல் செய்வதற்கு அதிகாரம் எனக்கு வழங்கி உள்ளாரா என்றால் வழங்கி உள்ளார். அவ்வாறு எனக்கு வழங்கப்பட்டதாக சொல்லப்படும் அதிகாரம் சம்மந்தமான ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு அந்த அதிகாரம் எந்த ஆண்டு, எந்த தேதியில் வழங்கப்பட்டது என்று எனக்கு நினைவில்லை. அவ்வாறு அதிகார ஆவணம் தாக்கல் செய்திருந்தால் அது நீதிமன்ற வழக்கு கோப்பில் இருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட அதிகார ஆவணத்தை என்னால் கோப்பிலிருந்து எடுத்துக் காட்ட முடியுமா என்றால் காட்ட முடியும். நீதிமன்ற வழக்கு கோப்பை பரிசீலனை செய்து தாக்கல் செய்ததாக சொல்லப்படும் அதிகார ஆவணத்தை காட்டுவதற்காக எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.